தூத்துக்குடியில் 3,500 நாட்டுப்படகுகள் மீன் பிடிக்க செல்லவில்லை

● **தூத்துக்குடி/நாகர்கோவில்**

வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கை காரணமாக தூத்துக்குடி மாவட்டத்தில் 3,500 நாட்டுப்படகுகள் நேற்று கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை.

தூத்துக்குடி மாவட்டத்தில் பெரியதாழை முதல் வேம்பார் வரை உள்ள கடற்கரை கிராமங்களில் 2.4 மீட்டர் முதல் 2.7 மீட்டர் உயரம் வரை பேரலைகள் எழும்பக்கூடும் என்றும், மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்தில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்தது.

இதனால், தூத்துக்குடி மாவட்டத்தில் கடற்கரையை ஒட்டி உள்ள சுற்றுலா தளங்கள் மற்றும் கடற்கரையோர கிராமங்களில் கடலின் அருகில் செல்லவோ, கடற்கரையில் நடைபயிற்சி மேற்கொள்ளவோ, கடலில் இறங்கி குளிக்கவோ கூடாது என்றும், மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டத்தில் விசைப்படகுகள் ஏற்கெனவே தடைக்காலம் காரணமாக கடலுக்கு செல்லவில்லை.

வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கையைத் தொடர்ந்து சுமார் 3,500 நாட்டுப்படகுகளும் நேற்று கடலுக்கு செல்லவில்லை.

கன்னியாகுமரி

குமரி கடல் பகுதியில் பலத்த காற்று வீசும், கடல் கொந்தளிப்புடன் இருக்கும் என்பதால் கடற்கரை பகுதிக்கு செல்வதை தவிர்க்க வேண்டும் என ஆட்சியர் ஸ்ரீதர் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதனால் நேற்று சுற்றுலா பயணிகள் வருகை இன்றி கன்னியாகுமரி களையிழந்து காணப்பட்டது. மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை. கடற்கரை கிராமங்கள் வெறிச்சோடி காணப்பட்டன.

இதுபோல் திருநெல்வேலி மாவட்டத்திலும் நேற்று மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை.

விசைப்படகு மீனவர்களுக்கு படகு ஓட்டுநர் உரிமம்

↑ **தூத்துக்குடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் படகு ஓட்டுநர் உரிமம் பெற்ற விசைப்படகு மீனவர்கள்.** படம்: என்.ராஜேஷ்

● **தூத்துக்குடி**

தூத்துக்குடியில் மீன்வளக் கல்லூரி சார்பில் பயிற்சி பெற்ற 34 மீனவர்களுக்கு படகு ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் சுமார் 6,000-க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மீன் பிடிப்பில் ஈடுபட்டு வருகின்றன. இப்படகுகளை இயக்கும் மீனவர்கள் ஓட்டுநர் உரிமம் இன்றி, தங்களுடைய அனுபவ அடிப்படையில் மீன்பிடிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டு தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மீன்பிடித் தொழில்நுட்பவியல் மற்றும் மீன்வளப் பொறியியல் துறை, ராமநாதபுரம் அரியமான் கடற்கரையில் அமைந்துள்ள கடல்சார் பயிற்சி இயக்குநரகம் இணைந்து, கடந்த 2019-ம் ஆண்டில் இருந்து 'படகு இன்ஜின் பராமரித்தல், பழுதுபார்த்தல் மற்றும் மாலுமிக்கலை' பற்றிய ஒருவார பயிற்சிகளை வழங்கி வருகிறது.

இப்பயிற்சிகள் தமிழக அரசின் 'ஆழ்கடல் மீன்பிடி பயிற்சி மையங்களை நிறுவுதல்' எனும் திட்டத்தின் கீழும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிதியுதவியுடனும் மொத்தம் 450 மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பயிற்சி அளிக்கப்பட்ட மீனவர்களில் இதுவரை சுமார் 66 பேர் படகு ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ளனர். இம்மீனவர்கள் 24 மீட்டர் ஒட்டுமொத்த நீளத்துக்கும் குறைவான நீளம் கொண்ட 240 குதிரைத்திறனுக்கு குறைவான இயந்திரம் பொருத்தப்பட்ட படகுகளை இயக்க உரிமம் பெற்றுள்ளனர்.

தூத்துக்குடி மீன்பிடித் துறைமுக வளாகத்தில் மீனவர்களுக்கு 'படகு ஓட்டுநர் உரிமம்' வழங்கும் விழா நேற்று நடைபெற்றது.

மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் ப.அகிலன் தலைமை வகித்து, தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த 34 விசைப்படகு மீனவர்களுக்கு படகு ஓட்டுநர் உரிமங்களை வழங்கினார்.

மீன்பிடித் தொழில்நுட்பவியல் மற்றும் மீன்வளப் பொறியியல் துறைத் தலைவர் நீ.நீதிச்செல்வன், பேராசிரியர் ந.வ.சுஜாத் குமார், தூத்துக்குடி தமிழ்நாடு கடல்சார் பயிற்சி கழக முதல்வர் ஜே.மோகன்குமார், தமிழ்நாடு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் தி.விஜயராகவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தூத்துக்குடி அரசு இசைப்பள்ளியில் மாணவர் சேர்க்கை தொடக்கம்

● **தூத்துக்குடி**

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் கோ.லட்சுமிபதி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தூத்துக்குடி மாவட்ட அரசு இசைப்பள்ளியில் மாணவ, மாணவியர் சேர்க்கை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இப்பள்ளியில் சேர 12 வயதுக்கு மேல் 25 வயதுக்குள் இருக்க வேண்டும். குரலிசை, பரத நாட்டியம், தேவாரம், வயலின், மிருதங்கம் ஆகிய கலைகளுக்கு 7-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தவில், நாகசுரம் ஆகிய கலைகளுக்கு எழுதப்படிக்க தெரிந்திருந்தால் போதுமானது.

இசைப்பள்ளி படிப்பின் கால அளவு மூன்றுஆண்டுகள் ஆகும். இப்பள்ளியில் படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் மாதந்தோறும் ரூ.400 கல்வி உதவித்தொகை வழங்கப்படும். அரசு விடுதி வசதியும் செய்து தரப்படும். வெளியிடங்களில் இருந்து வரும் மாணவர்களுக்கு இலவச பேருந்து கட்டண வசதியும் செய்து தரப்படும்.

மூன்று ஆண்டுகள் பயின்று அரசுத் தேர்வுகள் இயக்ககம் நடத்தும் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவர்கள் கர்நாடக இசைக் கச்சேரிகள் நடத்தவும், நாகசுரம் மற்றும் தவில் வாசித்து தொழில் புரியவும், தேவாரம் பாடுதல் மற்றும் கோயில்களில் பணிபுரியவும், வானொலி மற்றும் தொலைக் காட்சிகளில் நடத்தப்படும் இசை நிகழ்ச்சிகளில் பங்குபெற்று திறமைகளை வெளிப்படுத்தவும் வாய்ப்புகள் உள்ளன.

திருக்கோயில்களில் தேவார ஓதுவார் பணியில் சேர இப்பள்ளியில் தேவார இசை பயின்று தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு முன்னுரிமை அளித்து வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என, அரசு ஆணையிட்டுள்ளது.

கலை ஆர்வமுள்ள மாணவ, மாணவிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும், விவரங்களுக்கு தலைமை ஆசிரியை, அரசு இசைப்பள்ளி, தூத்துக்குடி- 2 என்ற முகவரியிலும், 9487739296 என்ற செல்போன் எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவில்பட்டியில் தமாகா நூதன போராட்டம்

● **கோவில்பட்டி**

கோவில்பட்டியில் வருவாய்த் துறையை கண்டித்து தமாகாவினர் நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோவில்பட்டி நகராட்சி வார்டு எண் 23, 24 -க்கு உட்பட்ட கடலையூர் சாலை, வள்ளுவர் நகர் பகுதி குடியிருப்புகளுக்கு பட்டா வழங்க வேண்டும்.

அதேபோல், வள்ளுவர் நகர் பகுதியில் சர்வே எண் 513-ல் கடந்த 2017-ம் ஆண்டு அரசு நிலம் ஆக்கிரமிப்பு தொடர்பான பிரச்சினையில், அப்பகுதி நிலங்களை பத்திரப்பதிவு செய்வதற்கு தடை விதிக்கப்பட்டது.

இந்த தடை உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என, கடந்த ஆண்டு நடந்த ஜமாபந்தியில் தமாகா சார்பில் மனு வழங்கப்பட்டது.

ஆனால், ஓராண்டாகியும் மனு மீது நடவடிக்கை எடுக்கவில்லை எனக்கூறி, நேற்று காலை கண்களை கருப்பு துணியால் கட்டி, வட்டாட்சியர் அலுவலகம் அருகே உள்ள கோயிலில் விநாயகரிடம் மனு அளிக்கும் போராட்டத்தில் தமாகாவினர் ஈடுபட்டனர். வடக்கு மாவட்ட தலைவர் கே.பி.ராஜகோபால் தலைமை வகித்தார்.

"ஜமாபந்தி (வருவாய் தீர்வாயம்) என்பது ஆங்கிலேயர்கள் காலத்தில் கொண்டு வரப்பட்டது. இதில் வழங்கப்படும் மனுக்கள் மீது 7 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டும் என்பது விதி.

ஆனால், நாங்கள் மனு வழங்கி 365 நாட்களை கடந்து விட்டது. ஜமாபந்தி விதியை பின்பற்ற வேண்டும்" என, அவர்கள் வலியுறுத்தினர்.

குடிபோதையில் விபத்து ஏற்படுத்தியவர் கைது

● **தூத்துக்குடி**

தூத்துக்குடி அண்ணாநகர் 4-வது தெருவைச் சேர்ந்த சரவணகுமார் மகன் விக்னேஷ் (எ) விக்கிபாண்டி (எ) விக்கி (25). மினி சரக்கு வாகன ஓட்டுநரான இவர், கடந்த 9-ம் தேதி இரவு மது போதையில் மினி சரக்கு வாகனத்தை அந்த பகுதியில் தாறுமாறாக ஓட்டிச் சென்றுள்ளார். அதே பகுதியில் டீக்கடை நடத்தி வரும் இசக்கிராஜா மகன் இசக்கிகுணா (23) என்பவர் மீது மோதியுள்ளார்.

இதில் காயமடைந்த இசக்கிகுணா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். தூத்துக்குடி தென்பாகம் போலீஸார் வழக்கு பதிவு செய்து விக்னேஷை கைது செய்தனர்.

இளைஞர் கைது

தூத்துக்குடி கீதாஜீவன் நகரைச் சேர்ந்த சண்முகவேல் மகன் சிலுவை பிச்சை ராபின் (30). இவர் கடந்த 9-ம் தேதி மதுபோதையில் தனது குடும்பத்தாரிடம் சண்டை போட்டுள்ளார்.

அப்போது அவரது உறவினரான அதே பகுதியைச் சேர்ந்த ஜீவா (37) என்பவர் அவரை கண்டித்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த சிலுவை பிச்சை ராபின், தனது உறவினர் ஜீவாவை கத்தியால் தாக்கியுள்ளார்.

தென்பாகம் போலீஸார் வழக்கு பதிவு செய்து சிலுவை பிச்சை ராபினை கைது செய்தனர்.

இவர் மீது ஏற்கனவே தூத்துக்குடி தென்பாகம் உள்ளிட்ட பல்வேறு காவல் நிலையங்களில் 6 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

வியர்க்குதே

● **தூத்துக்குடி**

■ **தூத்துக்குடி நகர்ப்புற மின் விநியோக செயற்பொறியாளர் ஆர்.கண்ணன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தூத்துக்குடி கடற்கரைச் சாலை துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் இன்று (ஜூன் 12) காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை நடைபெறுகிறது. எனவே , தூத்துக்குடி இனிகோ நகர், ரோச் காலனி, சகாயபுரம், மினி சகாயபுரம், மாதா தோட்டம், கடல்சார் மீன்வள ஆராய்ச்சி நிலையம், தெற்கு கடற்கரைச் சாலை, லயன்ஸ் டவுன், தெற்கு காட்டன் சாலை, சுனோஸ் காலனி, செயின்ட் பீட்டர் கோயில் தெரு, தெற்கு எம்பரர் தெரு, மணல் தெரு, பெரைரா தெரு, விக்டோரியா தெரு, பெரிய கடைத்தெரு, ஜார்ஜ் சாலை, சண்முகபுரம் பிராப்பர், சந்தை சாலை, கணேசபுரம், பாத்திமா நகர், இந்திரா நகர், புல்தோட்டம், பனிமய நகர், தாமோதர நகர், வண்ணார் தெரு, பெருமாள் தெரு, டெலிபோன் காலனி, தாமஸ் நகர், காந்தி நகர், மேலசண்முகபுரம் 2-வது தெரு, கடற்கரைச் சாலை மற்றும் அதைச் சுற்றியுள்ள உப்பள பகுதிகளில் இன்று காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின் நிறுத்தம் செய்யப்படும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

தமிழ்நாடு அரசு - **நீர்வளத்துறை**
திட்டங்கள் வட்டம், திருநெல்வேலி - 627002
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.01க.பொ./தி.வ/திலி/2024-2025/ நாள்.07.06.2024
ஒப்பந்தப்புள்ளி படிவம் : மொத்த ஒப்பந்தம் - விலை விகித ஒப்பந்தப்புள்ளிமுறை

தமிழ்நாடு ஆளுநரின் சார்பாக கண்காணிப்பு பொறியாளர், நீர்வளத்துறை, திட்டங்கள் வட்டம், திருநெல்வேலி, அவர்களால் நீர்வளத்துறை/ பொதுப்பணித்துறையில் பதிவு செய்துள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து **www.tntenders.gov.in** என்ற இணையதளம் வாயிலாக அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் 01.07.2024 அன்று மாலை 3.30 மணிக்கு,கண்காணிப்பு பொறியாளர், நீ.வ.து, திட்டங்கள் வட்டம், திருநெல்வேலி அலுவலகத்தில் மின்னணு முறையில் திறக்கப்படும்.

மின்னனு ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய நிர்ணயிக்கப்பட்ட நாள் மற்றும் நேரம்	: 14.06.2024 முதல் 28.06.2024 பிற்பகல் 3.00 மணி வரை.
மின்னனு ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் பதிவேற்றம் செய்ய இறுதி நாள் மற்றும் நேரம்	: 28.03.2024 பிற்பகல் 3.00 மணி வரை
மின்னனு ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் திறக்கப்படும் நாள், மற்றும் நேரம்	: 01.07.2024 பிற்பகல் 3.30 மணி அளவில்
மொத்தப்பணிகள்	: 1 (ஒன்று)
வேலையின் மொத்த மதிப்புத் தொகை	: ரூ. 195.00 இலட்சம்

முன்வைப்புத்தொகை செலுத்த வேண்டிய விவரம், இதர விவரங்கள் குறித்த விதிமுறைகள் மற்றும் தகுதி விவரம் உள்ளிட்ட பிற அனைத்து விவரங்களும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் உள்ளது. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை **www.tntenders.gov.in** இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளி திருத்தங்கள், மாற்றங்கள் மற்றும் காலநீட்டிப்பு ஆகிய விவரங்கள் மேற்காணும் இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

செ.ம.தொ.இ/1828/ஒப்பந்தப்புள்ளி/2024 **கண்காணிப்புப் பொறியாளர், நீ.வ.து., திட்டங்கள் வட்டம், திருநெல்வேலி-2**

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: வடசேரி தெற்கு, டிஸ்டில்லெரி ரோடு, நாகர்கோயில் பேருந்து நிறுத்தம் அருகில், வடசேரி, அகஸ்தீஸ்வரம், நாகர்கோயில்-629001.

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்தினை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழக்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்து "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	08.01.2024 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித்தொகை (EMD)
1658210080000070 1.ராஜன்.R 2.சஜிதா.R	**(i) 27.11.2021** & 26.11.2021 அன்றுள்ளபடி ₹ **3,65,863/-** (ரூபாய் மூன்று லட்சத்து அறுபத்தைந்தாயிரத்து எண்ணூற்று அறுபத்து மூன்று மட்டும்) **(ii)** அடையாளபூர்வ சுவாதீனம்: **18.04.2022** நேரடி சுவாதீனம்: **25.03.2023**	ரூ.**5,52,532.85** (ரூபாய் ஐந்து லட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து ஐநூற்று முப்பத்திரண்டு மற்றும் பைசா எண்பத்தைந்து மட்டும்)	**ரூ.8,83,000/-** (ரூபாய் எட்டு லட்சத்து எண்பத்து மூன்றாயிரம் மட்டும்)	**ரூ.88,300/-** (ரூபாய் எண்பத்து எட்டாயிரத்து முன்னூறு மட்டும்)

சொத்து விவரம் : மார்த்தாண்டம் பதிவு மாவட்டம், கோலங்கோடு சார் பதிவு அலுவலக எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்.5560, மறு சர்வே எண்.622/2, பட்டா எண்.252, **மேத்துக்கும்மல் கிராமம், விளவங்கோடு தாலுகா, கன்னியாகுமரி மாவட்டம் என்னும் முகவரியில் 1.250 சென்டு நிலம் மற்றும் கட்டிடம்,** அதனுடன் அனைத்து உபகரணங்கள், பொருத்தப்பட்டுள்ளவைகள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: (1வது ஐட்டம்): கிழக்கு: மணி-ன் புஞ்சை சொத்தின் பகுதி, மேற்கு: தெரசம்மாள்-க்கு சொந்தமான புஞ்சை சொத்து மற்றும் மற்றவர்கள், தெற்கு: செல்லகன் புஞ்சை சொத்தின் பகுதி, வடக்கு: வழிப்பாதை (VAO படி சான்றிதழ்).

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 24.07.2024 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
தேதி: **23.07.2024** அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	**22.07.2024** காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.G.நடராஜன் - Mob: 95512 77444 / Mr.கிருபாகர் - Mob: 94455 08743 & Mr.புஷ்பகாந்த் - Mob: 98431 14222

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும். இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT. LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr.பிரபாகரன் Mob. No. 74182 81709**)) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT. LTD., Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.** விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.

i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

தேதி: 12.06.2024
இடம்: பெங்களூர்

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

rakeshh.sridhar@hindutamil.co.in

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

வணிக வளாகம்

விஷ்வரக்ஷா சீனியர்ஸ் ஹோம்

மாதாந்திர கட்டணத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய முதியோர் இல்லம்

தொடர்பு கொள்க:

Dr. K.சுகன்யா BDS., CEGM., MBA.,
பல் மருத்துவர் & முதியோர் நல மருத்துவர்
மேனேஜிங் டைரக்டர், விஷ்வரக்ஷா சீனியர்ஸ் ஹோம்
Cell: 81975 13869

11/72, 73, அழகப்பபுரம் - K.P.வலசை ரோடு, அழகப்பபுரம்
குத்துக்கல்வலசை (Po)- 627 803. தென்காசி மாவட்டம்

HDFC BANK
We understand your world

பதிவு அலுவலகம்: ஹெச்டிஎப்சி பேங்க் ஹவுஸ்,
சேனாபதி பபட் மார்க், லோயர் பேரல், மும்பை-400 013.

தங்க நகைகளுக்கான ஏல விற்பனை

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்களுக்கும் பொதுவாக பொதுமக்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால், பின்வரும் கணக்குகளில் கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்ட / தங்க நகைகளை விற்பதற்கு பொது ஏலம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. நகைக் கடன் பாக்கிகளை செலுத்துமாறு HDFC பேங்க் லிமிடெட் (வங்கி) அறிவிப்புகளை அனுப்பிய போதும், நகைக் கடன் பெற்ற கடன்தாரர்கள் தாங்கள் முறையாக கையொப்பமிட்டு ஒப்புக்கொண்ட கடன் ஒப்பந்தத்தின் படி, கடனை முறையாக திருப்பிச் செலுத்தவில்லை. பின்வரும் கணக்குகளில் உள்ள பாக்கித் தொகை முழுவதையும் ஏழு நாட்களுக்குள் செலுத்து மாறும், தவறினால் மேல் அறிவிப்பின்றி, அடமானத்தில் உள்ள கடனுக்கு ஈடான தங்க நகைகள் முழுவதும் ஏலத்தில் விட வங்கிக்கு முழு சுதந்திரம் உண்டு எனக் கடன்தாரர்களுக்கு HDFC அறிவிப்பு ஒன்றையும் அளித்துள்ளது. ஆனாலும், கடன்தாரர்கள் அக்கறையின்றி பாக்கித் தொகைகளை செலுத்தாமல் இருந்து வருகின்றனர். எனவே, அடமான கடன் ஒப்பந்தத்தின் கீழ், கடனுக்கு ஈடாக வைக்கப்பட்ட தங்க நகைகள் மீது தமக்குரிய உரிமையை செயல்படுத்துவதற்கு, அடமானம் பெற்றவர் என்ற அளவில் ஒப்பந்தத்தின் படி தனது உரிமைகளை செயல்படுத்த வங்கி உத்தேசித்துள்ளது. அதன்படி, கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகள் முழுவதையும் ஏலத்தில் விற்று கடன்தாரர்களிடமிருந்து வங்கிக்குச் சேர வேண்டிய கடன் பாக்கியை வசூலிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏலமானது கீழ்க்கண்ட கிளைகளில் கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணைபடி நடத்தப்படும் எந்தவொரு காரணத்தால் அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் ஏலம் நடைபெறாவிடில் அல்லது கீழே குறிப்பிட்ட தேதியில் முடியவில்லை என்றால் அந்த ஏலத்தை பின்வரும் தேதியில் நடத்த வங்கிக்கு உரிமை உண்டு.

வ. எண்	நகை கடன் எண்	கடன்தாரர் பெயர்	கடன் தேதி	11.06.2024 அன்றுள்ளபடி மொத்த கடன் தொகை	ஏலம் நடைபெறும் இடம்	ஏலதேதி & நேரம்
1	73178769	பிரதீப் RG	13-08-2021	₹ 44,694.00	6555-குலசேகரன் நாகர்கோயில்	24-JUN-2024 & 4.30 pm
2	75110377	சங்கரலிங்கம் தலவை	22-03-2024	₹ 1,10,659.60	4777-மேலபாளையம்	20-JUN-2024 & 4.30 pm
3	74077780	செல்வராணி கருப்பசாமி	23-03-2023	₹ 53,821.00	1104-தூத்துக்குடி	20-JUN-2024 & 4.30 pm

ஏலமானது "உள்ள இடத்தில் உள்ளவாறான" மற்றும் "உள்ளது உள்ளவாறான" என்ற அடிப்படையில் நடைபெறும். மேற்சொன்ன தங்க நகைகளில் மதிப்பு, தரம், எடை ஆகியவை பற்றி ஏலத்தின்போது வங்கியானது உத்தரவாதம் தர இயலாது. ஏலம் நடைபெறுவதற்கு 45 நிமிடத்திற்கு முன்பாக வல்லுநர் அறிவுறுத்தலுடன் அல்லது அறிவுறுத்தல் இன்றி ஏலதாரர்கள் அவர்களாகவே அவர்கள் சொந்த செலவில் நகையின் தரம், எடை, மதிப்பீடு ஆகியவை பற்றி நகைகளை வாங்குபவர்கள் தான் திருப்திபடும் வகையில் ஆய்வு செய்து கொள்ளலாம். இது தொடர்பாக வங்கியானது குறைந்தபட்ச கேட்புவிலையை நிர்ணயம் செய்து அதற்குட்பட்டு அனைத்து ஏலத் தொகைகளும் ஏற்கப்படும். ஏல நடவடிக்கைகள் மற்றும் விற்பனை (ஏதாவது இருந்தால்) ஆகியவை வங்கியின் தனிப்பட்ட முடிவின் படி சரி என்று கருதப்பட்ட மேற்கொண்டு விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏலம் நடைபெறும். மேலே குறிப்பிட்டபடி ஏலத் தேதிக்கு முன்பாக கடன் ஒப்பந்தத்தின்படி வங்கிக்கு செலுத்த வேண்டிய தனிப்பட்ட கடன் கணக்குத் தொகை முழுவதையும் வங்கிக்கு கடன்தாரர்(கள்) செலுத்தினால், மேற்சொன்ன கடன் கணக்கில் ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகள் வங்கியால் திருப்பி வழங்கப்படும். ஏலம் எந்தவித முன் அறிவிப்பும் இன்றி வங்கியால் வாபஸ் பெறப்படும். வங்கியின் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி அவருக்கு ஏலத்தை தள்ளிவைக்கவோ அல்லது ரத்து செய்யவோ முன் அறிவிப்பு எதுவும் இன்றி ஏல நடவடிக்கைகளை நிறுத்தவோ காரணங்கள் எதுவும் தெரிவிக்காமலேயே ஏலத்தை மறுக்கவோ, தகுந்த காரணத்தை கூறாமலேயே ஏலத் தொகைகள் / ஆ.ஃ.பர்களை மறுக்கவோ அதிகாரம் உள்ளது என்பதை அறியவும்.

தேதி : 12.06.2024

Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஹெச்டிஎ.ஃ.ப்சி பேங்க் லிமிடெட்

Azadi Ka Amrit Mahotsav
www.bankofbaroda.in
बैंक ऑफ़ बड़ौदा Bank of Baroda

டெண்டர் அறிவிப்பு

பாங்க் ஆப் பரோடா கீழ்க்கண்ட வேலைக்கான டெண்டர்களை வரவேற்கிறது

வேலையின் நோக்கம்

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள 20 கிளைகளுக்கு
SITC of LED டிஜிட்டல் பலகை (SITC of LED Digital Signage)
விற்பனையாளர் அடங்கிய குறு பட்டியல் தயாரித்தல்

விலைப்புள்ளிகளை சமர்ப்பிக்க கடைசி தேதி **25.06.2024** மாலை 3.00 மணிக்குள். மேலும் விவரங்களுக்கு எங்கள் வங்கியின் இணையதளத்தில் டெண்டர் பிரிவினை பார்க்கவும். **https://www.bankofbaroda.in/tenders/zonal-regional-offices**
இந்த விளம்பரம் தொடர்பாக எந்தவொரு திருத்தமோ / விளக்கமோ / மாற்றமோ எதுவும் இருப்பின், அது வங்கியின் இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

இடம்: சென்னை
தேதி: 12.06.2024

-ஒப்பம்-
பொது மேலாளர் & மண்டல தலைவர் (சென்னை மண்டலம்)

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

CHANGE OF NAME

I, D.JEBASTINSHANTHA KUMAR, S/o.Daniel, born on 18th June 1985, (Native District - Thoothukudi) residing at No.5/A 294B, Caldwell Colony, 4th Street, Thoothukudi - 628008, Thoothukudi District, Tamilnadu State, shall henceforth be Known as , JEBASTIN SANTHAKUMAR.

D.JEBASTINSHANTHA KUMAR
THOOTHUKUDI

சுய செய்தி

பெயர்மாற்றம்

CHANGE OF NAME

I, SANDHANA AJITH KUMAR J, S/o.Jeyaraj, born on 15th May 1997, (Native District - Thoothukudi) residing at No.3/35A, Kalaingar Nagar, Loorthammal puram, Thoothukudi - 628001, Thoothukudi District, Tamilnadu State, shall henceforth be known as, SANTHANA AJITH KUMAR J.

SANDHANA AJITH KUMAR J
THOOTHUKUDI

சுய செய்தி

பெயர்மாற்றம்

NAME CHANGE

I, **KUTUB SAMATHANI,** W/o. Mohamed Mydeen, residing at 45/60, Syed Ismail Thangal Thaikka Street, Melapalayam, Palayamkottai Taluk, Tirunelveli District - 627 005, Tamilnadu shall henceforth be known as **SAMATHANI.**

KUTUB SAMATHANI

கல்வி

வேலை வாய்ப்புகள்

WANTED

PRINICIPAL
For a reputed Higher Secondary School in Courtallam

HEADMISTRESS
For a reputed CBSE School in Courtallam

POST GRADUATE TEACHERS
in CHEMISTRY, COMPUTER SCIENCE, ZOOLOGY and PHYSICS

Candidates can mail their CV to schoolin2022@gmail.com or through post within seven days from the date of this Advertisement

பொது

சுற்றுலா

IRCTC
விமான சுற்றுலா
(சென்னையிலிருந்து)

நேபாள்	14.08.2024 (6 நாட்கள்) Rs.53,500/-
பூட்டான்	15.08.2024 (8 நாட்கள்) Rs.87,800/-
ஸ்ரீலங்கா	29.08.2024 (6 நாட்கள்) Rs.62,800/-

விமான கட்டணம், உணவு, ஹோட்டலில் தங்கும் வசதி, போக்குவரத்து, GST உட்பட
8287931974 / 9003140682

பொது அறிவிப்பு

ஆவணம் தவறிவிட்டது

கன்னியாகுமரி மாவட்டம், அழகியபாண்டிபுரத்தில் இயங்கிவரும் கனரா வங்கி அழகியபாண்டிபுரம் கிளையின் சார்பில் இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்வது யாதெனில் பூதபாண்டி சார்பதிவு அலுவலகத்தில் 22.04.2019 அன்று பதிவு செய்யப்பட்ட அசையா சொத்தின் அடமான ஒப்படைப்பு ஒப்பந்த அசல் ஆவணம் (MODTD) எண்: 612/2019 ஆனது கனரா வங்கி அழகியபாண்டிபுரம் கிளை வளாகத்தில் வைத்து தவறிவிட்டது. மேற்படி MODTD ஆவணம் அழகியபாண்டிபுரம் - 629851, தெற்கு தெரு, 17/120, என்ற முகவரியில் குடியிருந்து வரும் பெருமாள்பிள்ளை, அவர்கள் குமாரர் திரு. கிருஷ்ணபிள்ளை-க்கு சொந்தமானது. மேற்படி ஆவணத்தை எவரேனும் கண்டுபிடித்தால் 94890 46231 என்ற அலைபேசி எண் அல்லது கீழ்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கனரா வங்கி, 17/42/2, மணி காம்ப்ளக்ஸ், பால்மோர் ரோடு, அழகியபாண்டிபுரம் - 629851

பொது அறிவிப்பு

எமது கட்சிக்காரர், தூத்துக்குடி மாவட்டம், ஏரல் வட்டம், அகரம் மேலத்தெரு, கதவு எண். 1/292 என்ற முகவரியில் குடியிருக்கும் நாராயணன் அவர்கள் குமாரர் N.முத்துகுமார் (ஆதார் எண். 7577 2476 7616) அவர்கள் அளிக்கும் தகவலின் பேரில் அறிவிக்கும் பொது அறிவிப்பு என்னவென்றால்,

எமது கட்சிக்காரருக்கு (N.முத்துகுமார்) கிரயம் மூலம் பாத்தியப்பட்ட சொத்தானது அகரம் கிராமத்தில் உள்ளது. அதன் கிரைய ஆவண எண். 698/2014 மற்றும் அ.பு.சர்வே எண். 43/7 சப்டிவிசன்படி சர்வே எண்.73/7 ஆகும். தற்போது மேற்படி சொத்திற்கான தாய் பத்திரமான ஆவண எண்.886/1996 ஆகும். மேற்படி சொத்தை ஈடுகாட்டி எனது கட்சிக்காரர் Veritas Finance Pvt Ltd., என்ற நிறுவனத்தில் கடன் கேட்டு மனு செய்த போது ஷை நிறுவனத்தால் மேற்படி சொத்து சம்பந்தமான ஆவணங்கள் சரி பார்க்கப்பட்டது. அப்போது தான் எமது கட்சிகாரரின் தாய் பத்திரமான ஆவண எண்.886/1996 அசல் காணாமல் போனது தெரியவந்தது. ஆகவே ஷை காணாமல் போன ஆவணத்தை வைத்திருப்பவர்களை அல்லது மேற்படி சொத்தின் பேரில் யாருக்கேனும் உரிமையோ ஆட்சேபணையோ பின் தொடர்ச்சியோ இருந்தாலோ நாளது தேதி முதல் 15 நாட்களுக்குள் எழுத்து மூலமாக தக்க ஆதாரத்துடன் கீழ்க்கண்ட முகவரிக்கு தெரியப்படுத்தவும். அதற்கு பின்னிட்டு வரும் எந்தவிதமான ஆட்சேபணையும் எனது கட்சிக்காரரை எவ்வித வில்லங்கத்திற்கும் உட்படுத்தாது என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

P.இராஜசேகர் சுப்பையா, B.A., B.L.,
M.கங்கா இராஜசேகர், B.A., B.L.,
வழக்கறிஞர்கள் & நோட்டரி
தூத்துக்குடி. செல்: 94431 33542

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by Sri R.Barathan, Indian, Survey Nos. 38/2 to 40/2B, Madurai-Rameswaram Road, Puliankulam Village, Madurai South Taluk, Madurai-625201 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).